**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 164/2023**
**வழக்கு சாட்சி PW–15**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பகுவணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குத்தாலிங்கம் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | அகஸ்தியர்பட்டி | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October $30^{th}$, 2025.

**(1, 4, 8, 9 எதிரிகள் ஆஜர். இதர எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் அகஸ்தியர்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. லட்சுமிநாராயணனை எனக்கு தெரியும். அவர் எனது நண்பர். 3 வருடத்திற்கு முன்பு எங்கள் வீட்டு பக்கத்தில் நடைபயிற்சி சென்று கொண்டிருந்தபோது, ரோஜா தெருவில் கூட்டமாக நின்று கொண்டு சில நபர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களை தற்போது என்னால் அடையாளம் கண்டு சொல்ல முடியாது. 4 நாட்கள் கழித்து அவர்கள் ஒரு வீட்டில் திருடியதாகவும், அதற்காகத் தான் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் நான் கேள்விபட்டேன். வேறு விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

என்னுடன் வாக்கிங் வந்தவர் யார் என்றால் லட்சுமி நாராயணன். நான் வாக்கிங் சென்ற தெருவின் பெயர் கம்பர் தெரு என்றால் சரிதான். 28.06.2022ம் தேதி, மாலையில் நான் வாக்கிங் செல்லும்போது, ஷிப்ட் காரும், மற்றொரு காரும், இரண்டு இருசக்கரவாகனங்களும் அதில் சுமார் 10 நபர்கள் அரட்டை அடித்துக்கொண்டு பேசிக்கொண்டு நின்றார்கள் என்றால் சரியல்ல. 14.07.2022ம் தேதி, மதிய வேளையில் பாவூர்சத்திரம் போலீசார் எதிரி ஜான் விமல் சதீஷ் மற்றும் அவரது 3 நண்பர்களையும் கைது செய்து, அழைத்து சென்றதாக நியூஸ் பேப்பரில் படித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அருணாச்சலம் என்பவரின் வீட்டில் ரூபாய் பத்து லட்சம் பணமும், 150 பவுன் நகைகளும் கொள்ளையடித்து சென்று விட்டதாக போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரியல்ல. இந்த விபரங்களை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் மஜரா கோர்ஸில் வேலை பார்க்கிறேன். எனக்கு வேலை காலை 07.00 மணி முதல் மாலை 03.00 மணி வரையிருக்கும். என்னுடைய தகவலை போலீசாரிடம் யார் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 16:50:14 +0530